சார்பு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை. R.பாண்டி, பிஎஸ்.ஸி.,பி.எல்.,

சார்பு நீதிபதி, சிவகங்கை

2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6-ம் நாள் திங்கள் கிழமை

அசல் வழக்கு எண்.270/2023

CNR No.TNSV030003262023

...

யூகோ வங்கி, சிவகங்கை கிளை,
அதன் கிளை மேலாளர் மூலம். ...வாதி

..எதிர்..

1) பி.நாகசுந்தரம்
2) கே.பாண்டியராஜ்
3) பி.சரஸ்வதி ...பிரதிவாதிகள்

இவ்வழக்கானது 14.08.2023-ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 18.03.2026-ம் அன்று என் முன்னிலையில் இறுதி விசாரணைக்காக வந்த போது வாதிக்காக வழக்குரைஞர் திரு.எஸ்.சிவக்குமார் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகளுக்காக வழக்குரைஞர் திரு.R.சோமநாதன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்தும் அவர்கள் ஆஜராகாததால் அவர்களை தோன்றாத்தரப்பினர்களாக தீர்மானித்தும் , வாதி தரப்பு வாதுரை கேட்டும் இதுநாள் வரை இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

**<u>தீர்ப்புரை</u>**

வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் தொகை ரூ.2,84,265.31/-ஐ செலுத்த வேண்டும் என்றும் மேற்படி அசல் தொகை ரூ.2,84,265.31/-க்கு வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் தொகை முழுவதும் செலுத்தும் நாள் வரை 12.70 % வருட வட்டி சேர்த்து பிரதிவாதிகள் செலுத்தவேண்டும் என்றும் மற்றும் செலவுத் தொகை கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பிராதின் சுருக்கம்-</u>

பிரதிவாதிகள் வாதி வங்கியை அணுகி கல்விக்கடன் வழங்கும்படி ரூ.2,68,000/-கடன் கேட்டு 01.12.2014-ம் தேதியன்று விண்ணப்பம் செய்தனர். பிரதிவாதிகளுக்கு வாதி வங்கி கடந்த 12.12.2014-ம் தேதியன்று ரூ.2,46,000/- கடனாக வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கடனுக்கு ஆதரவாக பிரதிவாதிகள் 12.70% வட்டி சேர்த்து செலுத்துவதாக ஒப்புக்கொண்டு வாதி வங்கிக்கு 12.12.2014-ம் தேதியன்று Agreement for Loan cum Hypothecation ஆவணம் மற்றும் புரோநோட்டு எழுதிக்கொடுத்திருக்கிறார்கள். பிரதிவாதிகள் வாதி வங்கியில் பெற்ற கடன் தொகை சம்பந்தமான பற்று வரவு நகல் தாக்கல் செய்யப்படுகிறது. மேற்படி கடன் தொகைக்கு ஆதரவாக வாதி வங்கிக்கு கடந்த 08.12.2017, 30.11.2020-ம் தேதிகளில் ஒப்புகை ரசீது எழுதிக்கொடுத்துள்ளார். பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டபடி வாதி வங்கியில் பெற்ற கடன் தொகையினை திருப்பி செலுத்தி வைக்காமல் வங்கியினை ஏமாற்றும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறார்கள். அதனால் பிரதிவாதி அசல் மற்றும் வட்டியுடன் வரப்பெறுவதற்காக பிரதிவாதிகள் மீது தாவா அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. போதிய கால அவகாசம் வழங்கப்பட்டும் பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்தும் அவர்கள் ஆஜராகாததால் பிரதிவாதிகள் தோன்றாத்தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டு ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்கள்.

4. <u>பிரச்சினை</u>-

வாதியின் வழக்கு அனுமதிக்கத்தக்கதா ?

5) இவ்வழக்கில் வாதி வங்கியின் தரப்பில் வங்கியின் மேலாளர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணம் இல்லை. பிரதிவாதிகள் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்கள்.

6. <u>பிரச்சினைக்கான தீர்வு-</u>

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை கிளையில் அமைந்துள்ள யூகோ வங்கியால் இந்த அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி வங்கியில் 1ம்

பிரதிவாதியின் கல்விக்கட்டணம் செலுத்துவதற்காக கடன் பெறப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதியின் தகப்பனார் மற்றும் தாயாரான 2, 3 பிரதிவாதிகள் கடனை திரும்ப செலுத்துவதாக கூட்டாக கடன் ஆவணங்களில் கையொப்பம் செய்துள்ளார்கள். அசல் மற்றும் வட்டி தொகைகளை திருப்பி செலுத்துவதற்கு கடமைப்பட்டுள்ள 1 முதல் 3 பிரதிவாதிகள் கடனை திருப்பி செலுத்தவில்லை என்பதால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி வங்கிக்கு 12.12.2014 முதல் 31.10.2022 வரை அசல் மற்றும் வட்டியுடன் சேர்த்து ரூ.2,84,265.31/-செலுத்த வேண்டியுள்ளது என்றும் மேலும் தொடர்ச்சியாக வட்டியும் செலுத்த கடமைப்பட்டுள்ளார்கள் என்பதும் வாதி தரப்பு வழக்காகும்.

7. வாதி தனது வழக்கினை வா.சா.1 வாய்மொழி சாட்சியம் வாயிலாகவும், வா.சா.1 முதல் வா.சா.10 வரையிலான ஆவணங்கள் வாயிலாகவும் எடுத்துரைத்துள்ளார். பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் கல்விக்கடன் கேட்டு 01.12.2014-ம் தேதியன்று வா.சா.ஆ.1 விண்ணப்பம் தாக்கல் செய்துள்ளனர். மேற்படி கடனுக்கு ஆதரவாக 12.12.2014-ம் தேதியில் Loan Agreement-ம், Demand promissory Note-ம் எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி ஆவணங்களானது வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் செலுத்த வேண்டிய தொகை குறித்த Statement of Account வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 08.12.2017 மற்றும் 30.11.2020 ஆகிய தேதிகளில் Acknowledgment Receipts-ம் வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி ஆவணங்களானது வா.சா.ஆ.5 முதல் வா.சா.ஆ.10 வரையிலான ஆவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களையோ அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் விபரங்களையோ பிரதிவாதிகள் தரப்பில் நீதிமன்றத்தில் ஆஜராகி ஆட்சேபணை எதுவும் எழுப்பப்படவில்லை. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.5 முதல் வா.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் பிரதிவாதிகளால் வாதி வங்கிக்கு ஆதரவாக எழுதிக் கொடுக்கப்பட்டதாக வா.சா.1 சாட்சியமளித்துள்ளார். இந்த ஆவணங்களை சந்தேகிப்பதற்கு எந்த ஒரு முகாந்திரமும் இல்லை. ஆவணங்களுக்கு முரண்பட்ட சாட்சியங்கள் இல்லை. எனவே இந்த ஆவணங்கள் பிரதிவாதிகளால் ஒப்புக் கொள்ளப்பட்ட சான்றாவணங்களாக இந்த நீதிமன்றம் ஏற்றுக்கொள்கிறது.

**8**. பிரதிவாதிகள் தரப்பில் பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி வாதியின் வழக்கை மறுத்து எதிருரை எதுவும் தாக்கல் செய்யவில்லை. எவ்வித சாட்சியமும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மேலும் வா.சா.1 குறுக்கு விசாரணை செய்யப்பட வில்லை. அந்த வகையில் வாதியின் வழக்கு சட்டப்படியாக ஏற்றுக்கொள்ளத்தகுந்த வகையில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், பிரதிவாதிகள் வாதி வங்கியில் பெற்ற கடன் தொகைக்கு அசலையும் ஒப்புக்கொள்ளப்பட்ட வட்டித்தொகையுடன் திருப்பி செலுத்த கடமைப்பட்டுள்ளார்கள் என்றும் இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**9**. மேலும் வாதி வங்கியில் 1ம் பிரதிவாதியின் படிப்பிற்காக பிரதிவாதிகள் கல்விக் கடன் பெற்றுள்ளார்கள். 2, 3 பிரதிவாதிகளின் மகன் 1ம் பிரதிவாதி ஆவார். 1ம் பிரதிவாதி அவரது வாழ்க்கையில் படித்து முன்னேறுவதற்காக மேற்படிப்பிற்காக வாங்கிய கல்விக்கடன் என வாதி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களில் இருந்து பிரதிவாதிகள் வா.சா.ஆ.1-ன் மூலம் கடன் பெற்றுள்ளது நிரூபிக்கப் பட்டுள்ளதால் வாதி வங்கி கேட்டுள்ள வட்டி வீதத்தை குறைத்து 1 முதல் 3 பிரதிவாதிகள் பிராதில் குறிப்பிட்டுள்ள தொகைக்கு அசல் மற்றும் வட்டியுடன் திருப்பி செலுத்தவேண்டும் என இந்த பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக, வாதி வங்கிக்கு 1 முதல் 3 பிரதிவாதிகள் தொகை ரூ.2,84,265.31/-ஐ செலுத்த வேண்டும் என்றும் மேற்படி அசல் தொகை ரூ.2,46,000/-க்கு வழக்கு தாக்கல் செய்த நாள் தொகை முழுவதும் செலுத்தும் நாள் வரை 6% வருட வட்டியுடனும் மற்றும் வழக்குச் செலவுத் தொகையுடனும் திருப்பி செலுத்த வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

PANDY R

Digitally signed by PANDY R
Date: 2026.04.06 16:52:47 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை

**வாதி தரப்பு சாட்சி-**

வா.சா.1 - ஜானி வினோத்

**வாதி தரப்பு சான்றாவணங்கள்-**

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 - | 01-12-2014- | கடன் விண்ணப்பம் | - அசல் |
| வா.சா.ஆ.2 - | 12-12-2014- | கடன் ஒப்பந்தம் | - அசல் |
| வா.சா.ஆ.3- | 12.12.2014- | புரோ நோட் | -அசல் |
| வா.சா.ஆ.4 - | 12.12.2014 முதல் 31.10.2022 | கடன் கணக்கு விபரம் | -கணினி நகல் |
| வா.சா.ஆ.5 - | 08-12-2017- | ஒப்புகை ரசீது | -அசல் |
| வா.சா.ஆ.6 - | 08-12-2017- | ஒப்புகை ரசீது | -அசல் |
| வா.சா.ஆ.7 - | 08-12-2017- | ஒப்புகை ரசீது | -அசல் |
| வா.சா.ஆ.8 - | 30-11-2020- | ஒப்புகை ரசீது | -அசல் |
| வா.சா.ஆ.9 - | 30-11-2020- | ஒப்புகை ரசீது | -அசல் |
| வா.சா.ஆ.10 - | 30-11-2020- | ஒப்புகை ரசீது | -அசல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணம்-** இல்லை

PANDY R

Digitally signed by PANDY R
Date: 2026.04.06 16:52:41 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை

Subordinate Court, Sivagangai
O.S.No.270/2023
**Draft/Fair Judgment**
06.04.2026